**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 163/2019**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW1 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : Thiru. Shanmugam |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 25th day of March, 2025.

**(A are present. A absent, Petition filed and allowed.)**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை** :

நான் துணை ஆட்சியராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். பொன்னேரி வருவாய் வட்டாட்சியராக பணியில் இருந்தபோது 02/09/2016 அன்று நான் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது எனக்கு

தொலைபேசியில் தகவல் வந்தது. அந்த தகவலை பொன்னேரி சார் ஆட்சியரிடம் தெரிவித்தேன். பின்னர் சம்பவயிடத்திற்கு நானும், சார் ஆட்சியர், வருவாய் ஆய்வாளர், வி.ஏ.ஓ., ஆகியோர் தச்சூர் கிராமத்தில் வேலம்மாள் பள்ளிக்கு எதிரில் மாலை 6.00 மணிக்கு சென்றோம். ஜெயப்பிரகாஷ் என்பவருக்கு சொந்தமான ரைஸ்மிலில் இருளர் சமுதாயத்தை சேர்ந்த மொத்தம் 7 பேர் 3 குடும்பங்களாக இருந்தார்கள். நாங்கள் விசாரித்தபோது அவர்களுக்கு சரியான கூலி தருவதில்லை மற்றும் பணி இடத்தை விட்டு வெளியே செல்வதற்கு அனுமதிப்பதில்லை, சொந்த ஊருக்கு சென்று வர ரைஸ்மில்லின் உரிமையாளர் அனுமதி மறுக்கிறார் என்று கூறினார்கள். மேலும் அவர்களை கொத்தடிமைகளாக வைத்து கொடுமை படுத்தி மற்றும் முன்பனமாக மொத்தம் 7 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரம ரூபாய் கொடுத்துவிட்டு வேலை வாங்குவதாக அவர்கள் கூறினார்கள். அனைவரையும் சார் ஆட்சியர் அலுவலகம் பொன்னேரிக்கு அழைத்து சென்றோம். ஆர்.டி.ஓ. அவர்களிடம் வாக்குமூலம் பெற்றார். ஒவ்வொரு நபருக்கும் இடைக்கால இழப்பீடாக ரூபாய் 1000 கொடுத்தோம். பின்னர் கொத்தடிமை விடுவிப்பு சான்று மொத்தம் 7 நபர்களுக்கு கொடுத்து, அவர்களை சொந்த கிராமமான ஊத்துக்கோட்டை வட்டம் ராலப்பாடி அருகில் கொண்டு விட்டோம். பின்னர் இரவு 9.15 மணிக்க கவரப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். புகார் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பாதிக்கப்பட்ட 1 முதல் 7 நபர்களுக்கு கொடுத்த விடுதலை சான்று **அ.த.சா.ஆ.2** வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

பாதிக்கப்பட்ட நபர்களை பொறுத்து எனக்கு தகவல் எப்போது கிடைக்கப் பெற்றது என்றால் சுமார் 5.30 மணியளவில் தகவல் கிடைத்தது. நாங்கள் சம்பவயிடத்திற்கு சென்றபிறகு அங்கு யார் இருந்தார்கள் என்றால் 7 பேர் 3 குடும்பங்களாக இருந்தார்கள். அவர்களின் பெயர் தற்போது ஞாபகமில்லை. பாதிக்கப்பட்ட மனோகரன், கங்கம்மாள்

ஆகியோர் எத்தனை வருடங்களாக அங்கு பணிபுரிந்ததாக கூறினார்கள் என்றால் விசாரணையில் 13 வருடங்களாக பணிபுரிந்ததாக கூறினார்கள். அதற்கான ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. விசாரணையில் தெரியவந்தது. மனோகரன், கங்கம்மாள் ஆகியோர் கொடுத்த வாக்குமூலத்தில் 3 வருடங்களுக்கு முன்பதாக வந்ததாக கூறியுள்ளார்கள் என்றால் அவர்களது சொந்த ஊரான கொசவன்பேட்டையில் தங்க இடம் இல்லாததால் வந்ததாக கூறியுள்ளார்கள் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. மனோகரன், கங்கம்மாள் தவிர்த்து மாரி மற்றும் 4 நபர்கள் எப்போதிலிருந்து வேலை செய்ய வந்தார்கள் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. ஆர்.டி.ஓ. தான் விசாரணை செய்தார். சம்பவயிடத்திற்கு சென்ற நான் யாரையும் விசாரிக்க வில்லை என்றால் நான் விசாரித்துவிட்டு ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்கு அழைத்து சென்று விட்டேன். விசாரணையின் போது எழுத்துமூலமாக வாக்குமூலம் கொடுத்தார்களா என்றால் சம்பவயிடத்தில் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை. ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் வைத்து தான் பெறப்பட்டது. விசாரணையின் போது அவர்கள் சாப்பிடுவதற்கு ரைஸ்மில்லிலே உணவு கொடுப்பதாக சொன்னார்கள். அதுகுறித்து வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. புகாரிலும் இல்லை. மேற்படி நபர்கள் வெளியில் சென்று பொருட்கள் வாங்கி அவர்களே சமைத்து சாப்பிட்டார்கள் என்றால் ரைஸ்மில்லில் உணவு கொடுப்பதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனோகரன் என்பவர் கைபேசி மூலமாக தான் தகவல் தெரிவித்ததாக வாக்குமூலத்தில் கூறியுள்ளார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. அவர் உண்மையிலேயே கொத்தடிமையாக இருந்தால் அவரிடம் கைபேசி இருந்திருக்காது என்றாலும் அவர் கொத்தடிமையாக இல்லை என்றால் சரியல்ல. மனோகரன், கங்கம்மாள் ஆகியோர் தமிழ்நாடு பாளையம் ஊத்துக்கோட்டை என புகாரில் கூறியுள்ளேன். அவர்கள் கூறியதன் அடிப்படையில் அவ்வாறு அவர்களை ஊரை குறிப்பிட்டுள்ளேன். அதன்பின்னர் அந்த ஊர் பற்றி நான் விசாரித்தேனா என்றால் இல்லை. பாதிக்கப்பட்டதாக சொல்லும் நபர்கள் எவ்வளவு கூலி வாங்கினார்கள்

என்றால் முதலில் முன்பணமாக ரூபாய் 7 ஆயிரத்திலிருந்து ரூபாய் 10 ஆயிரம் வரை கொடுத்துவிட்டார்கள். பின்னர் மாதக்கூலியோ, வருடக்கூலியோ கொடுக்கவில்லை என்று கூறினர். கொத்தடிமைகளாக இருந்ததாக ஏதாவது ஒப்பந்தம் போடப்பட்டிருந்ததா என்றால் இல்லை. மனோகர் அங்கு என்ன வேலை பார்த்து கொண்டிருந்தார் என்றால் நெல் அவிக்கும் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் அவர் கணக்கு பார்க்கும் வேலை தான் பார்த்துக் கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. அங்கு பணிபுரிந்தவர்களுக்கான குடியிருப்பதற்கு வசதி செய்து கொடுக்கப் பட்டிருந்ததா என்றால் நல்ல முறையில் வசதி செய்து கொடுக்கப்படவில்லை. வரைபடத்தில் அவர்கள் குடியிருப்புகள் காட்டப்பட்டுள்ளது என்றால் நான் அதை பார்க்கவில்லை. நான் சம்பவயிடத்திற்கு சென்று சரிவர விசாரணை செய்யாமல் பொய்யான புகார் எதிரியின் மீது புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் புகாரில் சொல்லியவாறு எதிரி யாரையும் கொத்தடிமைகளாக பணியில் வைக்க வில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.